[1993 ஏப்ரல் 8

296—

தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டங்களில் விவசாய கல்லூரி தொடங்குதல்.

*13494—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் விவசாய கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இல்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நாகை—காயிதேமில்லத் மாவட்டமும், தஞ்சை மாவட்டமும் தமிழ்நாட்டின் நெற் களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. மேலும் தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால் அதிக விவசாய நிலங்களைக் கொண்டதும், அதிக விவசாயிகளைக் கொண்டதுமாக விளங்குவது இந்த இரண்டு மாவட்டங்கள்தான். எனவே, விவசாய உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கும், விஞ்ஞான ரீதியாக விவசாயம் செய்வதற்கும், இன்றைக்கு விவசாயிகளின் விடிவெள்ளியாக விளங்குகிற, தமிழ்நாட்டின் காவல் தெய்வம், எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் நாகை—காயிதே மில்லத் மாவட்டம் அல்லது தஞ்சை மாவட்டத்தில் விவசாய கல்லூரி தொடங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோவை, மதுரை, கிள்ளிக்குளம், நாவலூர், குட்டப்பட்டு ஆகிய நான்கு இடங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் சார்பாக கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளிலிருந்து ஆண்டுக்கு 376 பட்டதாரிகள் படித்து பட்டம்பெற்று வெளி வருகிறார்கள். கடந்த ஆண்டு வரையில் 2,000 பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக் கிறார்கள். எனவே, இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலையிலும் அரசு இல்லை. ஒரு புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு ஏறத்தாழ அரசு மூலதன மாக ஆறு கோடி ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. எனவே, இருக்கக்கூடிய நிதிநிலையைக் கருத்தில்கொண்டு புதிய கல்லூரி தொடங்கும் எண்ணம் அரசுக்கு இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்கள் இன்றைக்கு உலக அரங்கில் விவசாயத்திற்கு தன்னிகரற்ற மாவட்டங்களாகத் திகழ்ந்து வருகின்றன என்பது உலகம் அறிந்த ஒன்றாகும். அத்தனை நல்ல பிரசித்தி வாய்ந்த இந்த இரண்டு மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகள் பயன் பெறுகிற வகையில், இந்தக் கல்லூரியை உடனடியாகத் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும் கூட, இந்த மாவட்டங்களிலிருந்து வருகிற மாணவர்களுக்கு இந்தக் கல்லூரிகளில் முன்னுரிமை அளித்து சேர்ப்பதற்குரிய வாய்ப்பை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி வழங்குமா ? இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் நுழைவுத் தேர்வு தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 297, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

297—

விதவைகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்கான வயது வரம்பு.

*16530.—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகளுக்கு உதவித்தொகை அளிக்கப்படுவதற்கான வயது வரம்பு 45 வயதுக்கு மேல் என்றிருப்பதை 35-ஆகக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) வயது வரம்பு ஏற்கெனவே நீக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டு விட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.